RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22294

OPEN ACCESS

# அகநானூற்றில் மகளிர் உள சிக்கல்கள்

**த. திலகவதி [அ, *], மு. கவிதா [அ]**

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா.

# Women's psychological Problems in Akananuru

**T. Thilagavathi [a, *], M. Kavitha [a]**

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home science and Higher Education for women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: thilagadhuvarakish@gmail.com

Received: 21-09-2022
Revised: 17-11-2022
Accepted: 21-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Psychology is an attempt to learn about the behavior of all living things. Especially the personal quest to know oneself, pertaining to one's feelings, thoughts and actions. Psychology is the science of behavior and it's types. Self-contradictory coherence and social harmony are dual components of psychological well-being. Deficiency in any of these causes feelings of internal troubles, internal struggle, and internal tension. Such struggles and problems are revealed in the sangam literary songs. The aim of the study is to explore the psychological problems of women in Akananuru.

**Keywords:** Psyche, Locus, Vegli, Yakai, Pasalai, Aimalar, Kuriya, Tuchi, Elli, Karunjurum.

## முன்னுரை

உள்ளம் தொடர்பான செய்கைகளையும் நிகழ்வுகளையும் எடுத்துரைக்கும் அறிவியல் துறை (Psychology) எனப்படும். உளவியல் என்னும் சொல் கிரேக்க மொழிச் சொற்களை "சைக்கி" (Psyche) என்ற உள்ளத்தைக் குறிக்கும் சொல்லையும் "லோகஸ்" (Logus) என்னும் அறிவியலைக் குறிக்கும் சொல்லையும் மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது (Santhanam, 1987). உளவியல் மனிதர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக அறிகின்ற ஓர் அறிவியல். உளவியல் பல துறைகளையுடைய அறிவியலாகும். எல்லாத் துறைகளிலுமே அதனுடைய முக்கிய நோக்கம் மனிதர்களின் நடத்தையை முழுமையாக ஆய்வதாகும் என்கிறார்.

## இலக்கியமும் உளவியலும்

கலைகளில் சிறந்தது இலக்கியக்கலை. சங்க இலக்கியப் பாடல்கள் அகம், புறம் என்று பிரித்தறியாமல், அனைத்து பாடல்களிலும் உளவியல் உள்ளத்தைக் காணலாம். சங்க இலக்கியத்திற்கு பிரிதொரு பெயர் சூட்டுக" என்று கேட்டால் தயங்காமல் உளவியல் இலக்கியம் எனக் குறிப்பிடலாம். அகத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு எழுபத்தைந்தும் உளவியல் பற்றியனவே ஆகும். மேலும் தமிழில் ஒருவர் நிலையான, விரவின இலக்கிய உளவியல் நூலொன்றை எழுதுவரானால் அவர் பெரும்பான்மையான மேற்கோள்களைச் சங்க இலக்கியத்திலிருந்துதான் எடுத்துக்காட்டி தம் கொள்கையை நிலைநிறுத்த வேண்டியிருக்கும் என்று குறிப்பிடுவதனை ஒப்பிடத்தக்கது.

தொல்காப்பிய பொருளதிகார உளவிய்லுக்காக இலக்கணமாகவே உள்ளத்தைக் காண முடிகின்றது. தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை மெய்ப்பாடுகள் உள்ளத்தில் எழும் உணர்வுகளையே குறிக்கின்றன.

“அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று

அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப”

என்னும் இவ்வெட்டு மெய்ப்பாடுகளும் எவ்வெவ் காரணங்களால் எழுகின்றன என்பதை அவர் குறிப்பிட்டிருப்பது அவரின் உளவியல் வள்ளண்மையே காட்டுகிறது (Ilampooranar, 2005).

## தனிமனித உளவியல்

மனிதனின் தனித்தன்மையினை அடிப்படையாகக் கொண்டு தனிமனித உளம் சார்ந்தும் ஆராயப்படுகின்றது. ஒருவரின் நடத்தை மற்றும் குணப்பண்புகளை அவருடைய உளவியல் பின்னணியை எடுத்துக்காட்டுகிறது.

தனிமனிதன் சுய அனுபவங்களினால் பெறப்படுகின்ற உணர்வுகளின் அடிப்படையில் வாழ்கின்றான். சங்க இலக்கிய அக மாந்தர்கள் பெரும்பாலும் தனிமனித உளவியலுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளனர். சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றும் தனிமனிதக் கூற்றுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. தனிமனிதனின் நடவடிக்கைகளை அடிப்படையாகக் புலன் காட்சி, கற்றல், நினைவாற்றல், சிந்தனை, ஆளுமை போன்றவற்றின் மூலமாக அறிந்து கொள்கிறோம்.

## தலைவியின் உளப்பாங்கு

அகநானூற்றில் தலைவியின் கூற்றுக்களில் பெரும்பாலும் தனிமை இரக்கத்தை வெளிப்படுத்துகின்ற மனநிலை உடையவளாகத் திகழ்கிறாள். களவொழுக்கத்தில் தலைவனுடன் இன்புற்ற தலைவி இற்செறிப்பிற்கு ஆளாகின்றாள். இதனால் மிகுந்த வருத்தமடைகின்றாள். இத்துன்பத்தை அனுபவித்தே ஆகவேண்டும். ஒன்றை இழந்து மற்றொன்றைப் பெற நினைப்பது உள்ளப்போராட்டத்தின் தீர்வாகும். காமநோயால் வாட்டமுற்றதை செவிலித்தாய்க்குக் கூறவேண்டாம் என்று தலைவன் கேட்குமாறு தோழிக்குக் கூறுகிறாள். இதனை,

“சேர்ந்தன்று வாழி, தோழி! யாக்கை

இன் உயிர் கழிவது ஆயினும், நின் மகள்

ஆய்மலர் உன்கண் பசலை

காமநோய்” எனச் செப்பாதீமே”

என்ற பாடல் மூலமெள வெளிப்படுகின்றன (Jeyabal, 2004).

## மன இறுக்கம்

ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் மனம் கவலையால் விரக்தி நிலையை அடைவதை மனஇறுக்கமாகும். கவலை அல்லது தவிப்பு என்பது உளவியலாரின் கருத்தாகும். தலைவன் வரும்வரை அச்சம், அன்பு போன்ற பல்வேறு உணர்வுகளால் மன இறுக்கம் ஏற்படுகிறது.

“நில்லா நெஞ்சத்து அவர் வாரலரே, அதனால்”

தாய், நாய், ஊர், காவலர், நிலவு வெளிப்படுதல், கூகை குமுறுதல் போன்றவற்றால் தடை ஏற்படும். இத்தடைகள் இல்லாத நாளில் இரவுக்குறி நடைபெறும் எற்பதை இப்பாடல் வரியின் மூலம் அறிய முடிகிறது (Jeyabal, 2004).

## உறக்கமின்மை

மனம் துன்பநிலையில் இருக்கும்போது அதற்கான துர்வா எண்ணி எண்ணி உறக்கமில்லாத நிலை ஏற்படுகின்றது. இந்நிலையை உளவியலின் நிலை மாற்றம் என்று கூறுவர். இதனை,

“அஞ்சுவரு நோயொடு துஞ்சாதேனே”

தலைவன் பொருள் தேடச் சென்றதால் பிரியும் நிலை ஏற்பட்டது. பிரிவைத் தாங்காத தலைவி உறங்காமல் மிக்க வருத்தமுற்று காண்பதாக இப்பாடல் காணப்படுகின்றது (Jeyabal, 2004).

## தோழியின் உளப்பாங்கு

தலைவியின் நல்வாழ்விற்கு வழிகாட்டுபவளாகவும், தனக்கென உளவியல் தன்மை எதுவுமில்லாதவளாகவும், தலைவியின் மனத்தாக்கங்களின் வெளிப்பாடாய் அமைந்துள்ளாள்.

தம் தோழியாகிய தலைவியைத் தலைவன் திருமணம் செய்து கொள்ளாமலே காலம் கடத்துவதைக் கண்டு, தலைவன் மனத்தில் பதியுமாறு நல்வார்த்தைகளைக் குறிப்பாகக் கூறுவாள். அவன் நாட்டில் விலங்குகள் இயல்பாக இன்பத்தைப் பெறுவதைச் சுட்டிக்காட்டி, எம் தலைவியை அணுகினால் நிலையான இன்பத்தை எளிதில் பெறலாம் என்று தலைவனின் மனதில் பதியுமாறு நட்புணர்வுடன் எடுத்துரைக்கிறாள்.

“குறியா இன்பம், எளிதின், நின் மலைப்

பல்வேறு விலங்கும், எய்தும் நாட!

குறித்த இன்பம் நினக்கு எவன் அறிய”

என்னும் பாடலடிகள் மூலம் தலைவன், தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் நிலையைத் தலைவனுக்குத் தோழி கூறுகிறாள் (Jeyabal, 2004).

## செவிலியின் உளப்பாங்கு

உடன்போகிய தலைவியை நினைத்து செவிலி புலம்புகிறாள். இதனை,

“புன்தலை மன்றத்து அம்குடிச் சீறூர்

துணையொடு துச்சில் இருக்கும் கொல்லோ

கணையோர் அஞ்சாக் கடுங்கண் காளையொடு

எல்லி முன்னுறச் செல்லும் கொல்லோ?

எவ்வினை செயுங்கோல்? நேகோ யானே!

அரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ,

யாய்அறி வுறுதல் அஞ்சி

வேய்உயர் பிறங்களல் மலைஇறந் தோளே”

என்ற பாடல் மூலம் அழகிய சிற்றூரின் வழியே அவள் தன் காதலனுடன் காட்டில் ஓர் இடத்தில் நடை தளர்ந்து தங்கியிருக்கிறாளோ, அச்சம் தரும் அப்பாலை வழியில் அவனுக்கு முன்னால் நடந்து கொண்டிருக்கிறாரோ, திருமண விழாவில் பெற்ற தாய் “சிலம்புகழி நோன்பு” செய்து கழற்ற வேண்டிய தன் சிலம்பைத் தலைவியாகிய என் மகள் தலைவனோடு உடன்போக்கில் செல்ல இரவில் புறப்பட்ட போது உறங்கும் தாயை ஒலி செய்து எழுப்பிவிடுமே என்று, தானே கழற்றி வைத்துவிட்டுச் சென்றுவிட்டாள் என செவிலி புலம்புகிறாள் (Jeyabal, 2004).

## நற்றாயின் உளப்பாங்கு

நற்றாய், தலைவியைப் பெற்றெடுத்தவள். அக இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் நற்றியக்கும் தலைவிக்கும் உள்ள தொடர்பு மேலோட்டமாகவே காட்டப்பட்டுள்ளது. மகளை இழந்த தாய் தனக்குள் வருந்திக் கூறியதாக,

"பல்மல கருஞ்சுரும் போகிய தனக்குயான்

அன்னேன் அன்மை நன்வா யாக

மான்அதன் மயங்கயி மலைமுதல்சிறுநெறி

வெய்து இடையுறா அது எய்தி, முன்னர்ப்

புல்லென் மாமலைப்புலம்புகொள் சீறூர்

செல்விருந்து ஆற்றி, துச்சில் இருத்த,

நுனை குழைத்து அலமரும் நொச்சி

மனைகெழு பெண்டுயான ஆகுக மன்னே!"

என்ற பாடலில் தன் மகள் தனது உள்ளம் என்ன என்பதை அறியாமலேயே சென்றுவிட்டாள். இவர்கள் போகும் பாதையில் உள்ள சிற்றூரில், நொச்சி மரம் சூழ்ந்த குடிசையில் வாழும் ஒரு பெண்ணாக மாற்றிக் கொண்டு, அவர்களை வரவேற்று, விருந்து உபசரிக்க எண்ணுகின்றாள். நற்றாயின் உளநலத்தை வெளிப்படுத்துவதாக இப்பாடல் அமைகின்றது (Jeyabal, 2004).

## பரத்தையின் உளப்பாங்கு

தலைவனுக்குத் தலைவி அல்லாமல் வேறு சில பெண்களுடனும் தொடர்பு இருக்கும் அவர்கள் பரத்தையர் எனப்படுவர். பரத்தை தன் பாங்காயினர் கேட்பக் கூறியதாக,

"நறுவிரை தெளித்த நாறுஇணர் மாலை,

பெறிரி இனவண்டு ஊதல கழியும்

உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்,

புனைஇருங் கதுப்பின் நீகடுத் தோள்வயின்

அனையேன் ஆயின், அணங்குக, என்! என"

என்ற பாடல் மூலம் தலைவன் தன் மனைவியிடம் உன் கோபத்திற்குக் காரணமான அந்தப் பெண்ணை எனக்குத் தெரியவே தெரியாது. அவளோடு நான் காவிரிப் புதுப்புணல் ஆடவில்லை. அந்தத் தவற்றை நான் செய்திருந்தால் தெய்வம் என்னை வருத்தட்டும் என்று சூள் உரைத்து அவளைத் தேற்றுகின்றான். அப்படியானால் நேற்று என்னிடம் நீராடி களித்தவர் யார் வேறு ஒருவனா என்று தனக்குப் பாங்காயினரிடம் தலைவனைப் பழிக்கிறாள் பரத்தை. இவ்வாறு பரத்தையின் உளநலத்தை வெளிப்படுத்துவதாக இப்பாடல் அமைகிறது (Jeyabal, 2004).

## முடிவுரை

தனக்குத் தானே பேசுதல், புலம்புதல், கண்ணீர் விடுதல், உறக்கமின்மை, மன இறுக்கம் மேலும் தலைவியின் இரக்கத்தை வெளிப்படுத்துவதாக உளவியல் வெளிப்படுகிறது. தலைவியின் மனநிலைக்கேற்ப தோழியின் உள்ளத்தன்மையானது பேசுபவரின் மனநிலை, எண்ணம், செயல்பாடு அறிந்து அதற்கேற்ப பேசும் மன இயல்புடையனவாகத் தோழியின் உளத்தன்மையானது காணப்படுகிறது. மகளைப் பிரிந்த துயரத்தினால் அழுதல், புலம்புதல் என்னும் உணர்ச்சிகளின் வெளிப்பாடாய் செவிலியின் உளவியல் உணர்த்தப்படுகிறது. உடன்போக்கு மேற்கொண்ட மகளின்

பிரிவிடை, சமூகத்தில் எதிர்கொள்ளவிருக்கும் சிக்கலை எண்ணிக் கலக்கமடைகின்ற தாயின் மனநிலையை உளவியல் எடுத்துக்காட்டுகிறது. வளமான வாழ்விற்காகவும், பொருளுக்காகவும் செல்வமிக்க ஆடவர்களை விரும்புவர்களாக பரத்தையர் விளங்கியுள்ளதை உளவியல் வெளிக்காட்டுகிறது.

## References

Ilampooranar, (2005) Tholkappiyam Porulathikaram, Saratha Pathipagam, Chennai, India.

Jeyabal, R. (2004) Agananuru, New Century Book House, Chennai, India.

Santhanam, S. (1987) Kalvi Ulaviyal, Palaniyappa Brothers, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License